1969 ஆகஸ்ட் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளி குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.)

*　　*　　*　　*　　*

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

2 பேரவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து சில பகுதிகளை நீக்குவது குறித்து

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போன்று பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் ஆரம்பித்த விவாதத்தில் இருக்கிற எல்லாச் சொற்களையும் சட்டமன்ற நடவடிக்கைப் புத்தகத்திலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுது நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய ஒத்திவைப்புத் தீர்ப்புத் தீர்மானத்தை நிராகரித்தது குறித்து அவர் ஆரம்பித்த விவாதத்திலிருந்து அவர்கள் வெளியேறியது வரையிலும் நடந்த நிகழ்ச்சிகளைப்பற்றிய குறிப்புகளை சட்டமன்றக் குறிப்புப் புத்தகத்திலிருந்து நீக்கிவிட ஆணையிடுகிறேன். பத்திரிகைக்காரர்களும் அவற்றை வெளியிட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

3 ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

(i) மதுரை மாவட்டத்தில் நிலவும் பஞ்ச நிலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. சித்தன் அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்றைக் கொடுத்து இருக்கிறார்கள். அதில்

"To discuss the acute famine conditions prevailing in areas in and around Madurai district leading to mass evacuation and starvation death".

என்று சொல்லியிருக்கிறார்கள். இது அரசினுடைய அன்றாட நிர்வாகத்தில் இருக்கிற ஒன்றாகும். மேலும் வருகின்ற துணை நிதி நிலை அறிக்கையின்மீது உறுப்பினர்கள் கருத்துக்களை வழங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது, எனவே இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

** பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டது.